# பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்ட வேலைத்திட்டம்

# **கணிதம்**

## தரம் ஒன்று (இரண்டாம் தவணை)

2022

முன்பிள்ளைப் பருவவிருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

## நாட்டின் இடர் சூழ்நிலைக் காரணமாக பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கப்பெறாத பாடசாலை நாட்களின் பாடத்திட்டத்தினை நிறைவு செய்து கொள்வதற்குரிய அறிவுறுத்தல் திட்டம்.

நாட்டின் சமூக பொருளாதார இடர் சூழ்நிலை காரணங்களால் 2022ஆம் ஆண்டுக்கான தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை ஆரம்பப்பிரிவு கல்விப் பிரிவில் கற்கும் மாணவர்களை கருத்திற் கொள்ளும் போது இவர்கள் கல்வி கற்கும் காலத்தை இழந்துள்ளார்கள் என்பது தகவல் பகுப்பாய்வு மதிப்பீடுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாணவர்கள் இழந்துள்ள கற்றலுக்குரிய காலவேளைகளின் அடிப்படையினை நோக்காகக் கொண்டு அக் கல்வி ஆண்டுக்கான அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகளை அதனடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆரம்பக் கல்விப் பிரிவின் 1 – 5 வரையான தரங்களுக்கு இரண்டாம் தவணைக்கான கற்பித்தல் உள்ளடக்கங்களின் அத்தியவசியமான பகுதிகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வத்தியவசியமான பகுதிகள் நிறைவேற்றப்படும் போது இரண்டாம் தவணைக்குரிய கற்றல் சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுக்க இலகுவாக அமையும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

எவ்வாறாயினும் நாம் முன்வைக்கும் கருத்து யாதெனில் இரண்டாம் தவணைக்குரிய மிகவும் அத்தியவசியமான பாடப்பரப்புக்கள் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுத்திருப்பின் அவற்றை விடுவித்து அவசியமான தேவையான பாடப்பரப்பில் இருந்து ஆரம்பிக்கலாம்.

ஒவ்வொரு பாடப்பரப்புக்கள் சம்பந்தமாக தேவையான கால அட்டவணையில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப சுகமான முறையில் மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள சுதந்திரண்டு மாற்றங்களை ஏற்படுத்தி வாய்ப்பு தரப்பட்டிருப்பினும் பாடப்பரப்புகளை நிறைவு செய்வதற்குரிய பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களையே சாரும்.

ஒவ்வொரு பாத்திற்குமான பொது ஆசிரியர் வழிகாட்டியின் படி அத்தியவசியமானது என குறிக்கப்பட்ட பாடப்பகுதிகள் மாத்திரம் இங்கு உள்ளடக்கப்பட்டிருக்கின்ற தருவாயில் அத் தவணைக்குரியவைகளை பாடப்பரப்பில் அத்தியவசியமான செயற்பாடுகள் மிகவும் இலகுவான முறையில் தெளிவு படுத்தப்பட்டு பின் வீட்டிலிருந்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த உங்களால் முடியுமாயிருத்தல் வேண்டும்.

தெளிவு படுத்தப்பட்ட செயற்பாடுகள் வீட்டியல் இருந்து செய்வித்தலில் மாணவர்களை எந்த விதத்திலும் இடர் நிலைக்கும் தள்ளப்படக்கூடாது என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எவ்வாறாயினும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் சுமூகம், பாதுகாப்பு, மகிழ்ச்சி இவற்றுடன் மாணவர்களை ஒன்றிணையுங்கள்.
அதன்படி இலங்கை வாழ் ஆரம்பப் பிரிவில் கற்கும் மாணவச் செல்வங்களின் கற்றல் நடவடிக்கைகளை உறுதியுடன் பலனை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவை அனைத்தயையும் நிறைவு செய்ய எம் அனைவருக்கும் இறைவனின் ஆசியும் அருளும் கிடைக்க பிராத்திப்போம்

தரம் 1 - கணிதம்

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 1. இரண்டு பொருள்களின் நீளத்தை ஒப்பிடுவார். | • இரண்டு பொருள்களை அருகருகே வைத்து அவற்றின் நீளங்களை ஒப்பிடுவார்.<br>• எதேச்சையான அளவீட்டை பயன்படுத்தி நீளத்தை ஒப்பிடுவார்.<br>• பொருள்களின் நீளங்களை ஒப்பிடும் போது நீளம், கட்டை ஆகிய சொற்களைப் பயன்படுத்துவார். | • நீளத்தை அளத்தல் தொடர்பான பிரசினங்களை தீர்த்தல். | அலகு 12: செயற்பாடு 01 - 04 | 33 - 35 | 02 மணி |

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 2. **திண்மப் பொருள்களின் இயல்புகளையும், தன்மைகளையும் இனங்கண்டு மாதிரி உருக்கள் அமைப்பார்.** | • வெவ்வேறு திண்மப் பொருட்களின் இயல்புகளையும், தன்மைகளையும் விபரிப்பார்.<br>• ஒத்த வடிவ திண்மங்களை இனங்கண்டு வேறாக்குவார்.<br>• சூழலில் காணப்படும் பொருள்களின் வடிவங்களை இனங்கண்டு கூறுவார்.<br>• வெவ்வேறு திண்மப் பொருள்களின் தன்மையை மாதிரி உருக்கள் அமைப்பதற்காக பயன்படுத்துவார். | • வெவ்வேறு வடிவ வெவ்வேறு அளவுடைய திண்மங்களை பயன்படுத்தி வெவ்வேறு ஆக்கங்களை கட்டியெழுப்புதல்.<br>• கேத்திரகணித வடிவங்களால் ஆக்கங்களை அமைத்தலும் வடிவங்களை வரைதலும். | அலகு 13: செயற்பாடு 01 - 04 | 6 - 38 | 02 மணி |

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 3. சமனற்ற நிறையுடைய இரண்டு பொருள்களின் நிறைகளை ஒப்பிடுவார். | • இரண்டு பொருள்களின் நிறைகளை, நிறை கூட, நிறை குறைய என ஒப்பிடுவார்.<br>• சமனற்ற நிறையுடைய இரண்டு பொருள்களின் நிறை-களை ஒப்பிட்டு நிறை கூட, நிறை குறைய என இனங்கண்டு கூறுவார். | • நிறையை அளத்தல் தொடர்பான பிரசினங்களைத் தீர்த்தல். | அலகு 14: செயற்பாடு 01 - 03 | 39 - 40 | 02 மணி |
| | 4. நான்கு தொடக்கம் ஆறு வரையிலான எண்களை இனங்கண்டு பயன்படுத்துவார். | • 4, 5, 6 பொருள்களின் அல்லது பொருட்களின் எண்ணிக்கைக்குப் பொருத்தமான எண்குறிகளைக் கூறுவார்.<br>• 4, 5, 6 எண்களைச் சரியாக எழுதுவார். | • 4, 5, 6 ஆகிய எண்களை இனங்கண்டு விளக்கத்துடன் பயன்படுத்துதல். | அலகு 15: செயற்பாடு 01 - 03 | 41 - 42 | 02 மணி |

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 5. ஒரே வகையான பொருள்கள் அல்லது உருக்கள் 10 வரை சரியாக எண்ணுவர். | • 1 - 10 வரையிலான எண் பெயர்களை தொடரொழுங்கில் சரியாகக் கூறுவார்.<br>• ஒரே வகையான பத்து பொருள்களைச் சரியாக எண்ணுவார்.<br>• ஒரே வகையாக ஒரு கோலத்தில் அமைந்த பத்து உருக்களை எண்ணுவார். | • உருக்கள் அல்லது படங்களை எண்ணுதல். | அலகு 16: செயற்பாடு 01 - 03 | 43 - 45 | 02 மணி |

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| வடிவம், அமைவு ஆகியன மாறினாலும் உள்ளடங்கும் அளவு மாறாது என இனங்கண்டு கூறுவார். | 6. எண்ணொன்றின் மாறாத் தன்மையை விளக்குவார். | • அளவில் (எண்ணிக்கை-கயில்) சமமான பொருள் தொகுதிகள் இரண்டினை வகை, வவடிவம், பருமன், நிறம் வேறுபட்ட போதிலும் அவற்றை ன்றுடன் ஒன்று பொருத்தி, அளவில் சமமானது என்பதை விளங்கிக் கொள்வார்.<br>• தொகுதியொன்றிலுள்ள பொருள்களை பிரித்து வெவ்வேறாக வைத்த போதிலும் பொருள்களின் மொத்த எண்ணிக்கை வேறுபடுவதில்லை என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• ஒரே பொருள் தொகுதியின் பொருள்களை வெவ்வேறு விதங்களில் வை-த்த போதிலும் பொருள்களின் எண்ணிக்கையில் வேறுபாடு ஏற்படுவதில்லை என ஏற்றுக்-ெகாள்வார். | • முன் கணித எண்ணக்கருக்கள் தொடர்பான செயல்பாடுகளில் ஈடுபடுதல். | அலகு 17: செயற்பாடு 01 - 04 | 46 - 49 | 02 மணி |

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| கேத்திரகணித வடிவங்களை இனங்கண்டு பெயர்களைக் கூறுவார். | 7. ஒரு கோலத்தில் அமைந்துள்ள பொருள்களின் அல்லது உருக்களின் கோலத்தை இனங்கண்டு தொடர்ந்தும் கோலத்தை கட்டியெழுப்புவார். | • ஒரு கோலத்தில் அமைந்துள்ள இரண்டு அல்லது மூன்று உருக்களின் கோலத்தை இனங்கண்டு தொடர்ந்தும் அக்கோலத்தை கட்டியெழுப்புவார்.<br>• இரண்டு அல்லது மூன்று உரு வகைகளை கொண்டு எளிமையான கோலங்களை கட்டியெழுப்புவார். | • பொருள் கோலம், உரு கோலம் என்பவற்றை உருவாக்குதல். | அலகு 18: செயற்பாடு 01 - 03 | 50 - 52 | 02 மணி |

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 8. ஒன்றுக்கொன்று வேறுபட்ட பாத்திரங்கள் இரண்டின் கொள்ளளவை அவை கொள்ளும் திரவத்தின் அளவு மூலம் ஒப்பிடுவார். | • அளவில் வேறுபட்ட இரண்டு பாத்திரங்களின் கொள்ளளவுகளை கூடுதலாக கொள்ளும் பாத்திரம், குறைவாக நீரை கொள்ளும் பாத்திரம் என ஒப்பிடுவார்.<br>• சிறிய பாத்திரங்கள் சிலவற்றைக் கொண்டு இரண்டு பாத்திரங்களின் கொள்ளளவுகளை ஒப்பிடுவார்.<br>• கொள்ளும் திரவத்தின் அளவை சிறிய பாத்திரத்தினால் அளந்து இரண்டு பாத்திரங்களின் கொள்ளளவை ஒப்பிடுவார்.<br>• பல்வேறு முறைகளைப் பன்படுத்தி இரு பாத்திரங்களின் கொள்ளளவை அளந்து ஒப்பிடுவார். | • கனவளவு கொள்ளளவு தொடர்பான பிரசினங்களைத் தீர்த்தல். | அலகு 19: செயற்பாடு 01 - 05 | 53 - 56 | 02 மணி 30 நிமி |

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| கேத்திரகணித வடிவங்களை இனங்கண்டு பெயர்களைக் கூறுவார். | 9. கேத்திரகணித தளவடிவங்களைக் கொண்டு ஆக்கம் புரிவார். எளிமையான கோலங்களை அமைப்பார். | • வட்டம், முக்கோணி, செவ்வகம், சதுரம் ஆகிய கேத்திரகணித தளவடிவங்களைப் பெயரிடுவார்.<br>• கேத்திரகணித தளவடிவங்களைப் பயன்படுத்தி ஆக்கங்களைக் கட்டியெழுப்புவார்.<br>• கேத்திரகணித தள உருக்கள் வரைவார்.<br>• தளவடிவங்கள் கொண்டு கோலங்கள் கட்டியெழுப்புவார். | • கேத்திரகணித வடிவங்களால் ஆக்கங்களை அமைத்தலும் வடிவங்களை வரைதலும்.<br>• தள உருக்களை கொண்டு எளிமையான கோலங்களை கட்டியெழுப் புதல். | அலகு 20: செயற்பாடு 01 - 04 | 57 - 59 | 02 மணி |

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 10. 7 தொடக்கம் 9 வரையான எண்களை இனங்கண்டு பயன்படுத்துவார். | • 7 தொடக்கம் 9 வரையான எண்களை பொருள்கள் / உருக்களால் வகைக்குறிப்பார்.<br>• ஏழு, எட்டு, ஒன்பது ஆகிய எண்களை வகை குறிப்பதற்காகப் பயன்படுத்தும் எண்குறிகளை இனங்கண்டு வாசிப்பார்.<br>• பொருள்கள் / உருக்ககளின் எண்ணிக்கைக்குப் பொருத்தமான எண்குறியை தெரிவு செய்வார்.<br>• 7 தொடக்கம் 9 வரையான எண்குறிகளை சரியாக எழுதுவார். | • 7 தொடக்கம் 9 வரையான எண்குறிகளை பயன்படுத்துதல். | அலகு 21: செயற்பாடு 01 - 04 | 60 -61 | 02 மணி |

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 11. 1 தொடக்கம் 9 வரையிலான ஊழியங்களை இனங்கண்டு பயன்படுத்துவார். | • 1 தொடக்கம் 9 வரையிலான ஊழியங்களை எண்களைப் பெயரிடுவார்.<br>• 9 வரையிலான ஊழியங்களைச் சரியாகப் பயன்படுத்துவார். | • 1 தொடக்கம் 9 வரையிலான ஊழியங்களை இனங்கண்டு பெயளளரிடுதல். | அலகு 22: செயற்பாடு 01 - 03 | 62 - 63 | 01 மணி 30 நிமி |
| மொத்த நேரம் | | | | | | 22 மணி |